# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 69 /2017**

திரு. V. பழனிச்சாமி,
தென்னிலை,
கோவை ரோடு,
தென்னிலை. . . . . . மேல்முறையீட்டாளர்
(திரு. V. பழனிச்சாமி)

எதிர்

1) செயற் பொறியாளர்/ இ.கா /கிராமியம்/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3, கோவை ரோடு,
கரூர்–639 002.

2) உதவி செயற் பொறியாளர்/இ.கா/சின்னதாராபுரம்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அரவகுறிச்சி தாலுகா,
கரூர்–639 202.

3) உதவி பொறியாளர்/ இ.கா /தென்னிலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தென்னிலை,
அரவகுறிச்சி தாலுகா – 639 206. . . . எதிர்மனுதாரர்கள்
(திரு. S. வேல்முருகன், செயற்பொறியாளர்/கிராமபுரம்/கரூர்
திரு. P. முருகன், உதவி செயற்பொறியாளர்/பல்லப்பட்டி, (i/c) &
திரு. R. அழகேசன், உதவி பொறியாளர்/தென்னிலை)

**<u>கேட்புரை நாள் : 15–2–2018</u>**

**<u>ஆணை நாள் : 22.06.2018</u>**

திரு. V. பழனிச்சாமி, தென்னிலை, கோவை ரோடு, தென்னிலை அவர்களின் 17.11.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.69/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 15.2.2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மேல்முறையீட்டாளருக்குச் சொந்தமான மின் இணைப்பு எண்.028–029–1342–ற்கு விதிக்கப்பட்ட தணிக்கை தொகை ரூ1,69,006/– செலுத்த உத்தரவிட்ட மின்நுகர்வோர் குறைதீர் மன்ற உத்தரவு எண்.16/29.11.2016–ஐ ரத்து செய்ய கோரியுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 கரூர் மாவட்டம், உதவி மின்பொறியாளர்/தென்னிலை எல்லைக்குட்பட்ட மின் பிரிவில் மேல்முறையீட்டாளருக்குச் சொந்தமான மின் இணைப்பு எண்.028–029–1342, TF-V சாலையோர உணவு விடுதிக்கு மின் இணைப்பாக பெறப்பட்டது. மேற்படி மின் இணைப்பிற்கு 10/2010 முதல் 06/2013 வரை சராசரி 5550 யூனிட்டிற்கு கணக்கீடு செய்து தணிக்கைச் சீட்டு எண்.122/15.04.2015ன் படி ரூ.4,44,582/– செலுத்த அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் அதே மின் இணைப்பிற்கு 2/2011 முதல் 8/2013 வரை உள்ள காலங்களுக்கு சராசரி யூனிட் 4305 யூனிட் என்ற அளவில் கணக்கீடு செய்து ரூ.3,55,495/– செலுத்த தணிக்கைச் சீட்டு எண்.3/14.03.2015ன் படி அறிவிப்பு வழங்கப்பட்டதை ரத்து செய்ய கோரியுள்ளார்.

2.2 அதன்பிறகு உதவி மின்பொறியாளர்/இகா/தென்னிலை அவர்களால் 07.11.2016 அன்று, ஒரு பகுதிக்குரிய விடுதல் தொகை 04/2011 முதல் 08/2013 வரை உள்ள காலங்களுக்கு ரூ.1,69,006/– செலுத்த அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி தொகையை தள்ளுபடி செய்ய கோரி 29.11.2016 அன்று கரூர் மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையீடு செய்துள்ளார்.

2.3 மன்றம் 12.01.2017 நாளிட்ட ஆணையில் தீர்வு வழங்கியுள்ளது. மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 கரூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 12.1.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு*

*மனுவில் குறிப்பிட்டுள்ள மின் இணைப்பின் எண்.028–029–1342–ன் மின் பயனீட்டளவு மற்றும் தணிக்கை குழுவினரின் ஆய்வில் கண்டறியப்பட்ட விடுபட்ட தொகை கணக்கீடு ஆகியவற்றினை ஆவணங்களின்படி அலுவலர்களின் கருத்துக்களின்படி ஆராய்ந்து அறிந்ததில் தணிக்கை குழுவினரின் அறிக்கையின்படி 4/2011 முதல் ஒரு பகுதியினை வசூல் செய்ய தெரிவித்துள்ளதால், ஏற்கனவே நுகர்வோர் மாதா மாதம் செலுத்திய தொகையினை கழிக்க இயலாது. எனவே, விடுபட்ட ஒரு பகுதி தொகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2,27,091/–ல் மனுதாரர் ஏற்கனவே செலுத்திய ரூ.58,085/– போக மீதமுள்ள தொகை ரூ.1,69,006/–ஐ செலுத்த மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.*

*இவ்வாறாக மேற்படி மனு எண்.16/29.11.16 ஆனது இம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

4.1 மேல்முறையீட்டாளருக்குச் சொந்தமான மின் இணைப்பு எண்.028–029–1342, TF-V சாலையோர உணவு விடுதிக்கு மின் இணைப்பாக பெறப்பட்டது. மேற்படி கட்டிட வளாகத்தை 2011ம் வருடம் பிப்ரவரி மாதம் 2ம் தேதி M.வரதராஜன் என்பவருக்கும், அதன் பின்பு 02.11.2012ம் தேதி P.சிவசாமி என்பவருக்கும் வாடகைக்கு விடப்பட்டது.

4.2 மேற்படி மின் இணைப்பிற்கு 10/2010 முதல் 06/2013 வரை சராசரி 5550 யூனிட்டிற்கு கணக்கீடு செய்து தணிக்கை சீட்டு எண்.122/15.04.2015ன் படி ரூ.4,44,582/– செலுத்த அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் அதே மின் இணைப்பிற்கு 2/2011 முதல் 8/2013 வரை உள்ள

காலங்களுக்கு சராசரி யூனிட் 4305 யூனிட் கணக்கீடு செய்து ரூ.3,55,495/– செலுத்த குறிப்பிட்ட தணிக்கைச் சீட்டு எண்.3/14.03.2015ன் படி அறிவிப்பு வழங்கப்பட்டது.

4.3 மேற்படி தொகையை தள்ளுபடி செய்யக் கோரி 04.09.2015 அன்று விபரமான விளக்கத்துடன் ஆவணங்களுடன் உதவி மின் பொறியாளர்/இகா/தென்னிலை அவர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டது.

4.4 அதன்பிறகு உதவி மின்பொறியாளர்/இகா/தென்னிலை அவர்களால் 07.11.2016 அன்று, ஒரு பகுதிக்குரிய விடுதல் தொகை 04/2011 முதல் 08/2013 வரை காலங்களுக்கு ரூ.1,69,006/–ஐ எந்தவிதமான விபரமும் வழங்காமல் செலுத்த அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி தொகை எவ்வாறு விடுபட்டுள்ளது என்று கடித வாயிலாக விபரம் கேட்கப்பட்டது. அதற்கு தணிக்கை சீட்டின் விபரம் வழங்கப்பட்டது. மேலும் மேற்படி மின் இணைப்பிற்கு ஒரு பகுதிக்குரிய விடுதல் தொகை, சராசரி யூனிட் எடுத்து நான் செலுத்திய தொகையை கழிக்காமல் மொத்த தொகையை செலுத்த தெரிவித்துள்ளார்கள். எனவே, செலுத்திய தொகை போக மீதம் ரூ.55,185/– செலுத்த சம்மதம் தெரிவித்து, தலைவர், குறைதீர்க்கும் மன்றத்திற்கு 29.11.2016 அன்று மனு சமர்ப்பித்தேன்.

4.5 அம்மனு தொடர்பாக 12.01.2017 அன்று அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கடிதம் அனுப்பப்பட்டதாகவும், நான் ஆஜராகாத காரணத்தினால், இருக்கக்கூடிய வாரிய ஆவணங்களின்படியும், அலுவலர்களின் கருத்துக்களின்படியும், ஆராய்ந்து தணிக்கைக் குழுவினரின் அறிக்கையின்படி 04/2011 முதல் ஒரு பகுதியினை வசூல் செய்ய தெரிவித்துள்ளதால் நான் மாதா மாதம் செலுத்திய தொகையை கழிக்க இயலாது என்று குறிப்பிட்டு ரூ.1,69,006/– செலுத்த உத்திரவிட்டு மேற்படி மனு நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது என்ற உத்திரவு 12.01.2017 அன்று அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு கடிதம் வழங்கப்பட்டது.

4.6 குறைதீர்க்கும் மன்றத்தில் 12.01.2017 அன்று கலந்து கொள்ளுமாறு வழங்கப்பட்ட கடிதம் கிடைக்க பெறவில்லை என்றும், மற்றும் 12.01.2017 தீர்ப்புரை நகல் 16.05.2017 வரை கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவித்து, அதற்குரிய தீர்ப்புரை வழங்க வேண்டுமாய் 17.05.2017 அன்று மனுக்கொடுத்து 17.05.2017 அன்று தீர்ப்புரை நகல் பெறப்பட்டது.

4.7 எதிர்மனுதாரர் மன்றத்தில் மேற்படி மின் இணைப்பில் இருந்து மின் அளவியில் ஒருமுனை முன்னோட்டம் இல்லாத காரணத்தினால் வேறு மின் அளவி மாற்றப்பட்டது என்று

குறிப்பிட்டுள்ளார். ஆனால் மீட்டர் பழுது என்று மாற்றப்படவில்லை என Consumer Ledger ல் குறிப்பிட்டும் மேலும் சராசரி 2020 யூனிட் எவ்வாறு எடுக்கப்பட்டது என்ற விபரமும் குறிப்பிடவில்லை.

4.8 எனவே குறைதீர்க்கும் மன்றத்தில் பதிவான மனு எண்.6/29.11.2016ல் குறிப்பிட்ட தொகை ரூ.55,185/– செலுத்துவதற்கு தீர்ப்புரை வழங்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொண்டு, வாரியத்திற்கும், எனக்கும் நல்லுறவு இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த தொகையை கட்ட சம்மதிக்கிறேன் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u> :

5.1 திரு.V.பழனிச்சாமி கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டம் தென்னிலையில் உணவு விடுதி நடத்தி வருகிறார். அவருக்கு மின் இணைப்பு எண்.028–029–1342 TARIFF V-ல் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மின் பளு 11 KW ஆகும்.

5.2 மேற்கண்ட மின் இணைப்பிற்கு 22.06.2013 அன்று மீட்டர் மாற்றம் செய்யப்பட்டுள்ள காரணத்தால் வாரிய தணிக்கை குழு, திருச்சி அவர்களால் தணிக்கை சீட்டு எண்.03 நாள் 14.03.2015–ல் 02/2011 முதல் 08/2013 வரை சராசரி தொகையாக ரூ.3,55,475/– வசூலிக்க கோரப்பட்டிருந்தது. மேலும் அதே மின் இணைப்பிற்கு தணிக்கை சீட்டு எண்.122 நாள் 15.04.2015–ல் 10/2010 முதல் 06/2013 வரை சராசரி தொகையாக ரூ.4,44,582/– வசூலிக்க கோரப்பட்டு பின்னர் அந்த தணிக்கை சீட்டு ரத்து செய்யப்பட்டது.

5.3 மேலும், மேற்கண்ட மின் இணைப்பிற்கு கணக்கு அலுவலர், வருவாய் புலனாய்வு குழு, கரூர் அவர்களால் 02/2013 முதல் 06/2013 வரை சராசரி தொகையாக ரூ.58,085/– வசூலிக்க கோரப்பட்டு அத்தொகையானது நுகர்வோரிடமிருந்து 28.02.2014 அன்று வசூல் செய்யப்பட்டுவிட்டது.

5.4 தணிக்கை சீட்டு எண்.03 நாள் 14.03.2015–ற்கு நுகர்வோரிடம் தணிக்கை தொகையை செலுத்தும்படி உதவி மின்பொறியாளர்/இ&கா/தென்னிலை அவர்களால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கு நுகர்வோர் மறுப்பு தெரிவித்து, அக்கால கட்டத்தில் மின் பயனீடு குறைவாக பயன்படுத்தியதாக தெரிவித்த காரணத்தால், அவரின் கோரிக்கையை ஏற்று, துணைத் தலைமை அகநிலை தணிக்கை அலுவலர், திருச்சி அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டது.

5.5 ஆனால் துணைத் தலைமை அகநிலை தணிக்கை அலுவலரின் கடித எண்.2178 அ.எண்.1516 நாள் 21.10.2016–ல் 04/2011 முதல் ஒரு பகுதிக்குரிய பணத்தை வசூல் செய்து விபரம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக மேற்கூறிய காலகட்டத்திற்கு ஒரு பகுதிக்குரிய தொகையாக ரூ.2,27,091/– கணக்கிடப்பட்டு, ஏற்கனவே நுகர்வோரிடமிருந்து வசூல் செய்த ரூ.58,085/– ஐ கழித்து ரூ.1,69,006/– செலுத்துமாறு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

5.6 ஆனால் நுகர்வோர் மேற்கூறிய தொகையை செலுத்தாமல், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கரூர் அவர்களிடம் மன்ற மனு எண். 16/2016 நாள் 29.11.2016–ன் படி மனு அளித்து, விசாரணை நாளில் ஆஜராகாத காரணத்தால், மன்றமானது இருக்கக்கூடிய வாரிய ஆவணங்களையும், வாரிய நடைமுறைகளையும் கருத்தில் கொண்டு ஒரு பகுதி தொகையாக ஏற்கனவே செலுத்திய தொகை நீங்கலாக ரூ.1,69,006/– செலுத்தமாறு நுகர்வோருக்கு உத்திரவிட்டிருந்தது.

5.7 எனவே, tnerc விதிகளின்படி மேற்படி மின் இணைப்பு எண்.028–029–1342க்கு விதிக்கப்பட்டுள்ள ரூ.1,69,006/– சரியானது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து தருமாறு சமர்ப்பித்து கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 15.2.2018 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. V. பழனிச்சாமி அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. S. வேல்முருகன், செயற்பொறியாளர்/கிராமபுரம்/கரூர் திரு. P.முருகன், உதவி செயற்பொறியாளர்/பல்லப்பட்டி (i/c) & திரு.R. அழகேசன், உதவி பொறியாளர்/ தென்னிலை ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் திரு. V. பழனிச்சாமி அவர்கள் கேட்புரையில் கலந்துகொண்டு அவரது மேல்முறையீட்டு மனுவில் உள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளருக்குச் சொந்தமான மின் இணைப்பு எண்.028–029–1342, TF-V சாலையோர உணவு விடுதிக்கு மின் இணைப்பாக பெறப்பட்டதாகவும், மேற்படி மின் இணைப்பிற்கு 10/2010 முதல் 06/2013 வரை உள்ள காலங்களுக்கு சராசரி யூனிட் 4305 யூனிட் கணக்கீடு செய்து ரூ.3,55,495/– செலுத்த தணிக்கைச் சீட்டு எண்.3/14.03.2015ன் படி அறிவிப்பு வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

7.3 மேற்படி தொகையை தள்ளுபடி செய்ய கோரி 04.09.2015 அன்று விபரமான விளக்கத்துடன் ஆவணங்களுடன் உதவிமின் பொறியாளர்/இகா/தென்னிலை அவர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டதாகவும், அதன்பிறகு உதவி மின்பொறியாளர் இகா/தென்னிலை அவர்களால் 07.11.2016 அன்று, ஒரு பகுதிக்குரிய விடுதல் தொகையாக 04/2011 முதல் 08/2013 வரை காலங்களுக்கு ரூ.1,69,006/–ஐ செலுத்த எந்தவிதமான விபரமும் வழங்காமல் அறிவிப்பு வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

7.4 மேலும் மேற்படி மின் இணைப்பிற்கு ஒரு பகுதிக்குரிய விடுதல் தொகை, சராசரி யூனிட் எடுத்து அவர் செலுத்திய தொகையை கழிக்காமல் மொத்த தொகையையும் செலுத்த தெரிவித்திருந்ததால், அவர் செலுத்திய தொகை போக மீதம் ரூ.55,185/– செலுத்த சம்மதம் தெரிவித்து குறைதீர்க்கும் மன்றத்திற்கு 29.11.2016 அன்று மனு சமர்ப்பித்தாக தெரிவித்தார்,

7.5 அம்மனு தொடர்பாக 12.01.2017 அன்று அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கடிதம் அனுப்பப்பட்டதாகவும், மேல்முறையீட்டாளர் ஆஜராகாத காரணத்தினால், இருக்கக்கூடிய வாரிய ஆவணங்களின்படியும், அலுவலர்களின் கருத்துக்களின்படியும், ஆராய்ந்து தணிக்கைக் குழுவினரின் அறிக்கையின்படி 04/2011 முதல் ஒரு பகுதியினை வசூல் செய்ய தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டாளர் மாதா மாதம் செலுத்திய தொகையை கழிக்க இயலாது என்று குறிப்பிட்டு ரூ.1,69,006/– செலுத்த உத்திரவிட்டு மேற்படி மனு நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது என்ற உத்திரவு 12.01.2017 அன்று அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

7.6 எதிர்மனுதாரர் மன்றத்தில் மேற்படி மின் இணைப்பில் இருந்த மின் அளவியில் ஒருமுனை மின்னோட்டம் இல்லாத காரணத்தினால் வேறு மின் அளவி மாற்றப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் மீட்டர் பழுது என்று மாற்றப்படவில்லை என Consumer Ledger ல் குறிப்பிட்டும் மேலும் சராசரி 2020 யூனிட் எவ்வாறு எடுக்கப்பட்டது என்ற விபரமும் குறிப்பிடவில்லை என்றும் தெரிவித்தார்.

7.7 எனவே குறைதீர்க்கும் மன்றத்தில் பதிவான மனு எண்.6/29.11.2016ல் குறிப்பிட்ட தொகை ரூ.55,185/– செலுத்துவதற்கு தீர்ப்புரை வழங்க வேண்டுமாய் கோரினார்.

8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் சார்பில் திரு. S. வேல்முருகன், செயற்பொறியாளர்/கிராமபுரம்/கரூர் திரு. P.முருகன், உதவி செயற்பொறியாளர்/பல்லப்பட்டி(i/c) & திரு.R. அழகேசன், உதவி பொறியாளர்/ தென்னிலை ஆகியோர் கலந்து கொண்டு அவர்களுடைய பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 திரு.V.பழனிச்சாமி கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டம் தென்னிலையில் மின் இணைப்பு எண்.028–029–1342 TARIFF V-ல் உணவு விடுதி நடத்தி வருவதாகவும், மேற்கண்ட மின் இணைப்பிற்கு 22.06.2013 அன்று மீட்டர் மாற்றம் செய்யப்பட்டுள்ள காரணத்தால் வாரிய தணிக்கை குழு, திருச்சி அவர்களால் தணிக்கை சீட்டு எண்.03 நாள் 14.03.2015–ல் 02/2011 முதல் 08/2013 வரை சராசரி தொகையாக ரூ.3,55,475/– வசூலிக்க கோரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

8.3 மேலும், மேற்கண்ட மின் இணைப்பிற்கு கணக்கு அலுவலர், வருவாய் புலனாய்வு குழு, கரூர் அவர்களால் 02/2013 முதல் 06/2013 வரை சராசரி தொகையாக ரூ.58,085/– நுகர்வோரிடமிருந்து 28.02.2014 அன்று வசூல் செய்யப்பட்டதாக தெரிவித்தனர்.

8.4 தணிக்கை சீட்டு எண்.03 நாள் 14.03.2015–ற்கு நுகர்வோரிடம் தணிக்கை தொகையை செலுத்தும்படி உதவி மின்பொறியாளர்/இ&கா/தென்னிலை அவர்களால் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் அதற்கு நுகர்வோர் மறுப்பு தெரிவித்து, அக்கால கட்டத்தில் மின் பயனீடு குறைவாக பயன்படுத்தியதாக தெரிவித்த காரணத்தால், அவரின் கோரிக்கையை ஏற்று, துணைத் தலைமை அகநிலை தணிக்கை அலுவலர், திருச்சி அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பியதாக தெரிவித்தனர்.

8.5 ஆனால் எதிர்மனுதாரர்களின் பரிந்துரையை ஏற்றுக்கொள்ளாமல் துணைத் தலைமை அகநிலை தணிக்கை அலுவலரால் மேல்முறையீட்டாளரிடமிருந்து ஒரு பகுதிக்குரிய பணத்தை வசூல் செய்து விபரம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக மேற்கூறிய காலகட்டத்திற்கு ஒரு பகுதிக்குரிய தொகையாக ரூ.2,27,091/– கணக்கிடப்பட்டு, ஏற்கனவே நுகர்வோரிடமிருந்து வசூல் செய்த ரூ.58,085/– ஐ கழித்து ரூ.1,69,006/– செலுத்துமாறு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். ஆனால் மேல்முறையீட்டாளர் மேற்கூறிய தொகையை செலுத்தாமல், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திடம் மனு செய்து மன்றமும் இருக்கக்கூடிய வாரிய ஆவணங்களையும், வாரிய நடைமுறைகளையும் கருத்தில் கொண்டு ஒரு பகுதி தொகையாக ஏற்கனவே செலுத்திய தொகை நீங்கலாக ரூ.1,69,006/– செலுத்தமாறு நுகர்வோருக்கு உத்திரவிட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

8.6 எனவே, TNERC விதிகளின்படி மேற்படி மின் இணைப்பு எண்.028–029–1342க்கு விதிக்கப்பட்டுள்ள ரூ.1,69,006/– சரியானது என்பதால், மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொண்டனர்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது வழக்கெழு வினாவாக தெரிவது மேல்முறையீட்டாளருக்குச் சொந்தமான மின் இணைப்பு எண்.028–029–1342–ற்கு விதிக்கப்பட்ட தணிக்கை தொகை ரூ1,69,006/–ஐ ரத்து செய்ய கோரியுள்ளது ஏற்புடையதுதானா என்பதாகும்.

9.2 சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின்படி மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பிற்கு 2/2011 முதல் 8/2013 வரை உள்ள காலங்களுக்கு சராசரி 4305 யூனிட்கள் என்ற அளவில் கணக்கீடு செய்து ரூ.3,55,495/– செலுத்த தணிக்கைச் சீட்டு எண்.3/14.03.2015ன் படி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் அதே மின் இணைப்பிற்கு 10/2010 முதல் 06/2013 வரை சராசரி 5550 யூனிட்டிற்கு கணக்கீடு செய்து தணிக்கை சீட்டு எண்.122/15.04.2015ன் படி ரூ.4,44,582/– செலுத்த இரண்டாவதாக அறிவிப்பு வழங்கப்பட்டு அதன்பின் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

**9.3** மேல்முறையீட்டாளர் மேற்படி தொகையை தள்ளுபடி செய்யக் கோரி **04.09.2015** அன்று விபரமான விளக்கத்துடனும் மற்றும் ஆவணங்களுடன் உதவிமின் பொறியாளர்/இகா/தென்னிலை அவர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டதாகவும், அந்த கடிதத்தை துணைத் தலைமை அகநிலை தணிக்கை அலுவலருக்கு தணிக்கைத் தொகையை தள்ளுபடி செய்யும்படி எதிர்மனுதாரரால் பரிந்துரை செய்யப்பட்டதாகவும், ஆனால் அப்பரிந்துரை ஏற்கப்படாமல் **04/2011** முதல் ஒரு பகுதிக்குரிய பணத்தை வசூல் செய்து விபரம் தெரிவிக்கும்படி தணிக்கை அலுவலரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது. எனவே, மேற்கூறிய காலகட்டத்திற்கு ஒரு பகுதிக்குரிய தொகையாக சராசரி **2020** யூனிட்கள் என்ற அடிப்படையில் குறைவுத்தொகை ரூ.**2,27,091/–** கணக்கிடப்பட்டு, ஏற்கனவே மேல்முறையீட்டாளரிடமிருந்து வசூல் செய்த ரூ.**58,085/–** ஐ கழித்து ரூ.**1,69,006/–** செலுத்துமாறு உதவி மின் பொறியாளரால் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

**9.4** எதிர்மனுதாரர் மன்றத்தில் மேற்படி மின் இணைப்பில் இருந்த மின் அளவியில் ஒருமுனை மின்னோட்டம் இல்லாத காரணத்தினால் வேறு மின் அளவி மாற்றப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் மீட்டர் பழுது என்று மாற்றப்படவில்லை மீட்டர் changed, normal என Consumer Ledgerல் குறிப்பிட்டுள்ளதாகவும், மேலும் சராசரி **2020** யூனிட் எவ்வாறு எடுக்கப்பட்டது என்ற விபரமும் மேல்முறையீட்டாளரான தனக்கு இதுவரை வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

**9.5** துணைத்தலைமை அகநிலை தணிக்கை அலுவலரின் கடித நகல் மூலம் **2020** யூனிட் சராசரியாக எவ்வாறு கணக்கிடப்பட்டது என்ற விவர அறிக்கை எதிர்மனுதாரர்களின் பதிலுரைடன் சமர்பிக்கப்பட்டது.

**9.6** சராசரி **2020** யூனிட் எவ்வாறு எடுக்கப்பட்டது என்ற விபர அறிக்கையை ஆய்வு செய்த போது ஒரு முனை மின்னோட்டம் எந்த தேதியில் இருந்து இல்லை என்ற விபர அறிக்கையை எதிர்மனுதாரர்கள் தணிக்கை துறையிடம் சரியான ஆவணம் மூலம் சமர்பிக்காத நிலையில் **10/2009** –ல் பதிவாகிய **6060** யூனிட் என்ற அளவீட்டை கொண்டு ஒரு முனைக்கான மின்னோட்டத்திற்கான பயன்பாடு **2020** யூனிட் என்ற அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.7** சராசரி **2020** யூனிட்கள் என்ற கணக்கீடு சரியா என்பதையும், மின் அளவி பழுதான காலங்களுக்கு சராசரி மின் பயன்பாட்டளவை எவ்வாறு கணக்கீடு செய்யப்படவேண்டும் என்பதையும் அறிந்து கொள்ள நாம் மின்வழங்கல் விதிதொகுப்பின் சம்பந்தப்பட்ட விதி **11** ஐ ஆராய வேண்டும். அந்த விதி மின் வழங்கல் விதித்தொகுப்பில் உள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ **11. Assessment of billing in cases where there is no meter or meter is defective:***

***(1 )*** *Where supply to the consumer is given without a meter or where the meter fixed is found defective or to have ceased to function and no theft of energy or violation is suspected, the quantity of electricity supplied during the period when the meter was not installed or the meter installed was defective, shall be assessed as mentioned hereunder.*

***(2)*** *The quantity of electricity, supplied during the period in question shall be determined by taking the average of the electricity supplied during the preceding four months in respect of both High Tension service connections and Low Tension service connections provided that the conditions in regard to use of electricity during the said four months were not different from those which prevailed during the period in question.*

***(3)*** *In respect of High Tension service connections, where the meter fixed for measuring the maximum Demand becomes defective, the Maximum Demand shall be assessed by computation on the basis of the average of the recorded demand during the previous four months.*

***(4)*** *Where the meter becomes defective immediately after the service connection is effected, the quantum of electricity supplied during the period in question is to be determined by taking the average of the electricity supplied during the succeeding four months periods after installation of a correct meter, provided the conditions in regard to the use of electricity in respect of such Low Tension service connections are not different. The consumer shall be charged monthly minimum provisionally for defective period and after assessment the actual charges will be recovered after adjusting the amount collected provisionally.*

***(5)*** *If the conditions in regard to use of electricity during the periods as mentioned above were different, assessment shall be made on the basis of any consecutive four months period during the preceding twelve months when the conditions of working were similar to those in the period covered by the billing.*

***(6)*** *Where it is not possible to select a set of four months, the quantity of electricity supplied will be assessed in the case of Low Tension service connections by the Engineer in charge of the distribution and in the case of High Tension service connections by the next higher level officer on the basis of the connected load and the hours of usage of electricity by the consumer.*

***(7)*** *In case the consumer does not agree with the assessment made by the Engineer or the higher-level officer as the case may be, the matter may be referred to the next higher-level officer of the Licensee. In case the consumer is still not satisfied, the consumer is at liberty to approach the respective Consumer Grievance Redressal Forum of the Licensee.”*

9.8 மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும்பொழுது 11(2), 11(4), 11(5) மற்றும் 11(6) ஆகியவைகள்தான் சராசரி பயன்பாட்டை கணக்கீடு செய்வதற்கு ஆன விதிகள் ஆகும்.

9.9 மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி 11 (2) மற்றும் 11(5) ஐ பொறுத்த வரையில் அவை, மின்னளவி பழுதான காலத்திற்கு முந்தைய காலங்களில் உள்ள ஒத்த பயன்பாடுகளுடைய முந்தைய நான்கு மாத பயன்பாட்டின்படியோ அல்லது முந்தைய 12 மாத இடைவெளியில் ஒத்த பயன்பாடு உடைய தொடர்ச்சியான நான்கு மாதங்களின் பயன்பாட்டின்படியோ சராசரி கணக்கீடு செய்யப்படும் என அறியமுடிகிறது.

9.10 இவ்வழக்கில் 10/2009 ல் பதிவான ஒரே மின்பயனீட்டு அளவை மட்டுமே கருத்தில் கொண்டு மேல்முறையீட்டாளருக்கு ஒரு பகுதிக்குரிய தொகையாக சராசரி 2020 யூனிட்கள் என்ற அடிப்படையில் குறைவுத்தொகை ரூ.2,27,091/– கணக்கிடப்பட்டுள்ளது. இத்தகைய கணக்கீடு மின் வழங்கல் விதியின்படி தவறாகும். மேலும் அது ஒத்த பயன்பாடு உள்ள காலம் அல்ல என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

9.11 எதிர்மனுதாரர்கள் தணிக்கைத்துறையிடம் அளித்த கடிதத்தில் மின் அளவியில் ஒரு முனை புகைந்து விட்டது என தெரிவித்ததின் அடிப்படையில் தான் தணிக்கை துறை மேல்முறையீட்டாளரிடமிருந்து ஒரு பகுதிக்குரிய தொகையாக சராசரி 2020 யூனிட்கள் என்ற அடிப்படையில் குறைவுத்தொகை ரூ.2,27,091/– கணக்கிடப்பட்டு மேல்முறையீட்டாளரிடமிருந்து வசூல்செய்ய பரிந்துரை செய்துள்ளது.

9.12 ஆனால் எதிர்மனுதாரர்கள் மின் அளவியின் ஒரு முனை புகைந்துவிட்டது என்பதற்கு ஆதாரமாக MRT யிடம் இருந்து பெறப்பட்ட ஆய்வு அறிக்கையை சமர்பிக்கவில்லை. மேலும் செயற்பொறியாளர் நேரில் சென்று ஆய்வு செய்தார் என்பதற்கான ஆதாரத்தையும் சமர்பிக்கவில்லை.

9.13 ஒரு மின்னளவியில் ஒரு முனை புகைந்துவிட்டால் மற்ற இருமுனைகளில் பயன்படுத்திய பயனீட்டளவு மின் அளவியில் பதிவாகியிருக்கும். ஆனால் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மின்அளவியில் பதிவாகிய பயனீட்டளவு 4/2011 முதல் மிகவும் குறைந்த அளவே பதிவாகியுள்ளது. எதிர்மனுதாரர்களின் வாதத்தின்படி ஒருமுனையில் பதிவாகிய சராசரி அளவு 2020 யூனிட்கள் என்ற அளவில் மற்ற இரு முனைகளில் குறைந்தபட்சம் 3500–4000 யூனிட்கள் வரை

பதிவாகியிருக்கும். ஆனால் அவ்வாறு இரு முனைகளின் பயனீட்டளவு பதிவாகாததால் மின்அளவியின் ஒரு முனை புகைந்துவிட்டது என்று கூறும் எதிர்மனுதாரர்களின் வாதம் ஏற்புடையதாக இல்லை.

9.14 மேலும், கணிணியில் உள்ள விவரங்களின்படி 4/2011 முதல் 06/2013 வரை, அதாவது 21.06.2013 வரை Reading type normal என்றுதான் போடப்பட்டுள்ளது, 22.06.2013 அன்று மின் அளவியை மாற்றும் பொழுதும் Meter Changed/Reason-Normal என்றுதான் பதிவு காணப்படுகிறது. மின்அளவி பழுது என குறிப்பிடப்படவில்லை. Meter Change Register –ல்தான் உபயோகம் அதிகம் என்றும் மின் அளவி குறைந்த அளவே ஓடுகிறது என்றும் குறிப்பு காணப்படுகிறது.

9.15 தணிக்கை குழுமத்தினரால் விதிக்கப்பட்ட தணிக்கை தொகையை தள்ளுபடி செய்யுமாறு மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த கோரிக்கையை ஏற்ற எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண்.028–029–1342ஐ நேரில் சென்று ஆய்வு செய்து உதவி பொறியாளரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது முற்றிலும் உண்மை என்றும், மேலும் தணிக்கை சீட்டில் குறிப்பிட்டுள்ள அன்னபூர்ணா உணவகத்தின் உரிமையாளரிடம் ஆவணங்கள் வாங்கி சரி பார்த்ததில் 06/2013 முதல்தான் மின் உபயோகம் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், ஆகவே தணிக்கைத் தொகையை தள்ளுபடி செய்யுமாறு துணை முதன்மை உள்தணிக்கை அலுவலருக்கு பரிந்துரை செய்திருப்பது மேல்முறையீட்டாளரின் வாதத்தை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

9.17 இதன்மூலம் 4/2011 முதல் 06/2013 வரை அதாவது 21.06.2013 வரை மின்அளவி பழுது என்பதற்கான எவ்வித ஆதாரமும் எதிர்மனுதாரர்களால் சமர்பிக்கப்படவில்லை. எனவே மின்அளவி பழுதில்லா காலமான 4/2011 முதல் 06/2013 வரை சராசரி மின்கட்டணம் விதிப்பது தமிழ்நாடு மின்சார மின் வழங்கல் விதிகளின்படி சரியான நடைமுறையில்லை என்பதால் மேற்குறிப்பிட்ட காலங்களுக்கு விதிக்கப்பட்ட சராசரி கட்டணத்தை தள்ளுபடி செய்யலாம் என்று நான் தீர்வு செய்கிறேன்.

**<u>10. கவனிப்பாய்வு</u>**

10.1 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண்.028–029–1342–ல் 4/2011 முதல் 06/2013 உள்ள 28 மாத மின்பயனீட்டு காலங்களில் பதிவாகியுள்ள மின் பயன்பாடு மிகவும் குறைந்து

காணப்பட்ட நிலையில் உரிமதாரரின் மின்கணக்கீட்டாளர் மின்அளவு பதிவு செய்யும்போது சராசரி பயன்பாட்டை விட மிகவும் குறைவாக பதிவாகியுள்ளது என்றோ அல்லது மின்அளவி பழுதென்றோ எந்தவொரு குறிப்பையும் பதிவு செய்ததாக தெரியவில்லை. இந்த இரண்டு வருட காலத்தில் உரிமதாரரின் எந்தவொரு அலுவலரும் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு ஆய்வு செய்ததாக ஆய்வறிக்கையும் காணப்படவில்லை. மேலும் தணிக்கை துறையின் அறிவுறுத்தலுக்கு பின்னரும் விடுவிக்கப்பட்ட மின்அளவி MRT சோதனை கூடத்தில் சோதனைசெய்யப்பட்டு ஆய்வு அறிக்கை பெறப்படவில்லையென்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பை அவ்வப்போது உரிமதாரர் ஆய்வுசெய்து நடவடிக்கை எடுத்திருந்தால் மின்பகிர்மான கழத்திற்கு ஏற்படும் வருவாய் இழப்பை தவிர்த்திருக்கலாம். அவ்வாறல்லாமல் இரண்டு வருடம் கழித்து மின்அளவி பழுதின் காரணமாக மாற்றப்பட்டது என்று எந்தவொரு ஆதாரமும் இல்லாமல் விடுபட்ட தொகையை செலுத்த அறிவிக்கை கொடுப்பது தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

**11 <u>முடிவுரை</u>**

**11.1** பத்தி 9ல் உள்ள தீர்வின்படி தணிக்கை குழுமத்தினரால் 4/2011 முதல் 06/2013 வரை அதாவது 21.06.2013 வரை உள்ள காலஅளவிற்கான விதிக்கப்பட்ட தணிக்கை தொகை தள்ளுபடி செய்ய வேண்டுமென தீர்வு செய்யப்படுகிறது.

**11.2** மேற்கண்ட தீர்வினை இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் நிறைவேற்றியமைக்கான அறிக்கையை (compliance report)–ஐ 45 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

**11.3** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.69/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. V. பழனிச்சாமி,
தென்னிலை,
கோவை ரோடு,
தென்னிலை.

2) செயற் பொறியாளர்/ இ.கா /கிராமியம்/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3, கோவை ரோடு,
கரூர்–639 002.

3) உதவி செயற் பொறியாளர்/இ.கா/சின்னதாராபுரம்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அரவகுறிச்சி தாலுகா,
கரூர்–639 202.

4) உதவி பொறியாளர்/ இ.கா /தென்னிலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தென்னிலை,
அரவகுறிச்சி தாலுகா – 639 206.

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3, கோவை ரோடு, கரூர்–639 002.

6) தலைவர் & நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.